இடத்தில் ஒரு ஆள் அடிபட்டு வருகிறார் என்றால், அது எமர்ஜென்சி கேஸாக இருந்தால் உடனடியாக எக்ஸ்-ரே எடுத்து சிகிச்சை செய்ய முடியாமல திங்கட்கிழமை காலைதான் எக்ஸ்-ரே எடுத்து பார்த்து சிகிச்சை செய்ய முடியும். இந்த நிலைமையைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, எமர்ஜென்சி கேஸ்கள் வருவதாக இருந்தால், ஓமலூர் போன்ற வட்டப் பகுதிகளிலே கூட எக்ஸ்-ரே யூனிட் இருந்தாலும், அதிலே பணியாற்றுபவர் உடனடியாக அழைக்கப்பட்டு தகுந்த சிகிச்சையை மேற்கொள்ளலாம். உடனடியாக சிகிச்சை செய்வது இயலாத காரியம் அல்ல. ஏதாவது குறை இருக்குமானால் அதை நிவர்த்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாயூரம் மருத்துவ மனையில் இரத்த சேமிப்பு நிலையம்.

*612 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் அரசினர் மருத்துவ மனையில் இரத்தம் சேமிப்பு நிலையம் எப்போது முதல் செயல்படத் துவங்கும்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மாதிரி நீர், ரத்த சேமிப்பு நிலையத்தின் உபயோகத்திற்கு உகந்ததாக இருக்கிறது என அண்மையில் செய்த இரசாயன, நுண்ணியல் சோதனைகளின் மூலம் முடிவாகிவிட்டது. ஆதலால் மாயூரம் அரசு மருத்துவ மனையில் குருதி சேமிப்பு நிலையம் வெகு விரைவில் துவங்கப்படும்.

Intensive Family Planning Programme

*613 *Q*.- THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Health be pleased to state whether there is any proposal under the consideration of the Government to continue the scheme of Intensive Family Planning drive during the year 1973–74 also?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அதிக அளவு ஊக்கத் தொகையுடன் பெருமளவில் குடும்ப நலத் திட்ட அறுவை சிகிச்சை முகாம்கள் நடத்துவது இவ்வாண்டு கைவிடப்